21.01.2025

அசல் வழக்கு எண்: 205/2017

வா.சா.1 சாட்சி அழகுசுந்தரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்சி

எனது தகப்பனாரின் கையொப்பத்தை பார்த்தால் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 23.07.2021ம் தேதியிட்ட தான செட்டில்மெண்டு ஆவணத்தின் சான்றிட்ட நகலில் கண்ட கையெழுத்து எனது அப்பாவுடையது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தமிழில்தான் கையெழுத்து போடுவார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து எனது அப்பாவுடையது என்றால் சரிதான்.(1ம் பிரதிவாதி அழகர்சாமி என்பவர் தாக்கல் செய்த வக்காலத்தை சாட்சியிடம் காட்டி கேள்வி கேட்கப்பட்டது.)

1ம் பிரதிவாதி அவரது 2வது மனைவியான ராமுத்தாய் என்பவருக்கு சில சொத்துக்களை தானமாக எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது தகப்பனாருடன் சேர்ந்து ஆவணம் எதுவும் எழுதிகொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். (சாட்சி தாக்கல் செய்த வக்காலத்தை காட்டி கேள்வி கேட்கப்பட்டது.)

என்னிடம் காட்டப்படும் 05.05.2008ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலில் கண்ட கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான்தான் எழுதிகொடுத்தேன் என்றால் நான் எழுதிகொடுக்கவில்லை. ஆனால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணம் எழுதிகொடுத்த விபரம் தெரியும் என்றால் என்னிடம் கையெழுத்து மட்டும் கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். எனது தகப்பனார் எனக்கு தானம் எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்றால் எழுதி வைத்துள்ளார். எனக்கு எனது தகப்பனார் 19.06.2014ம் தேதி எழுதி வைத்த தான செட்டில்மெண்டு ஆவணத்தை அவர் மட்டும் எழுதி

வைத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்டு ஆவணத்தில் 1, 2 வாதிகள் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 23.07.2021ம் தேதியிட்ட தான செட்டில்மெண்டு பத்திரத்தில் 1, 2 வாதிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பொது சொத்துக்களை ஏற்கனவே பாகம் பிரித்துவிட்டோம் என்றாலும் அதனால்தான் 1, 2 வாதிகள் மேற்படி ஆவணங்களில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு தானம் கொடுக்க உரிமை இருப்பதுபோல் 2 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதற்கும் எனது தகப்பனாருக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி அவருக்கு கிடைத்த பாகத்தை சட்டப்படி எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி எனக்கு சொந்தம் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் முன்விரோதம் உள்ளது என்றால் ஆமாம். அவருக்கும் எனக்கும் முன்விரோதம் இருப்பதால் அவருக்கு கிரையம் கொடுக்க எனக்கு சம்மதம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் ரேனுகாதேவிக்கு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். ரேனுகாதேவிக்கு நாங்கள் கிரையம் கொடுக்காததால் சதிஸ்குமார் மூலமாக ரேனுகாதேவி கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. சதிஸ்குமார் பெயரில் உள்ள கிரைய பத்திரமும் ரேனுகாதேவி பெயரில் உள்ள பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் போக எனது தகப்பனாருக்கு இன்றைய தேதியில் சொத்துக்கள் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணங்கள் செல்லதக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.